Newsp aperin Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௯] யாழ்ப்பாணம்—சர்வசித்துஸு சித்திரைமீ ௩௦ ௳ ( 1947 மே 13 செவ்வாய்க்கிழமை) [இல கக

# அச்சம் என்பது இல்லை!

## சேர். துரைசுவாமியின் வேண்டுகோள்

"அச்சம் இல்லை! அச்சம் இல்லை!! அச்சமென்பதில்லை' என்று வாழ்பவனே உண்மைச் சைவசமயி யாவன்; அவன் அஞ்சுவது ஒன்றுமில்லை: அவனை அஞ்சுவதும் பிறிது ஒன்றில்லை. இந்த லட்சியத்தைச் சைவ மக்களாகிய நாம் எல்லாரும் கடைப்பிடிக்க வேண்டும்" என்று சென்ற செவ்வாய்க்கிழமை நல்லூர் ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச் சங்கத்துப் பதினான்காவது வருடாந்த விழாவையொட்டி நிகழ்ந்த பகிரங்கக் கூட்டத்தில் அரசாங்கசபைத் தலைவர் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி கூறினார்.

சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி முதலாம் தலைவர்கள் கூட்ட மண்டபத்திற்கு மேளவாத்திய சகிதமாக அழைத்துவரப்பட்டனர். நல்லூர், கல்வியங்காடு நாயன்மார்கட்டு முதலாம் கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்திற்குச் சமுகமளித்துவெள்ளிட இடமின்றிஇருந்தனர்.

தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயதும், வரவேற்புச் சபைத் தலைவர் டக்ர் வீ. எஸ். ராமநாதன் தமது வரவேற்புரையை ஆற்றினர். அதில் ஷெசங்கம் இதுவரை அடைந்துள்ள வளர்ச்சியையும், இனியும் அது ஹிந்துசமூகத்துக்கு ஆற்ற வேண்டிய தொண்டுகளையும் குறிப்பிட்டு, இன்று ஹிந்து சமுதாயத்துக்கு ஓர் சோதனைக்காலம் ஏற்பட்டிருக்கிறபடியால், ஹிந்துக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஹிந்து சமுதாயம் வாழ, ஹிந்துஸ்தானம் முன்னேற, ஹிந்துநாகரிகம் பரவ உழைக்கவேண்டும் என்றும், அன்று அகிலமெங்கும் ஆணை செலுத்திய ஹிந்து த்வஜம் மீண்டும் கெம்பீரமாகப் பறக்கவேண்டும் என்றும் வீரரசம் ததும்பப் பேசினர்,

இதன்பின் காரியதரிசி சென்ற கூட்ட அறிக்கை, வரவுசெலவு விபர அறிக்கைஎன்பவற்றை வாசித்தார்.

தலைவர் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள் தம் முன்னுரையில், அன்று தேவாரபாராயணத்தின்போது பாடப்பெற்ற "வேயுறு தோளிபங்கன்......" என்றற்றொடக்கமான எங்கள் ஆளுடைய பிள்ளையாரது வீரம்செறிந்த அற்புத மணிவாக்கையே பீடிகையாகக் கொண்டு பின்வருமாறு கூறினர்.

"சமயத்தின் உண்மைகளை எடுத்துச் செயலில் கொண்டுவரச்செய்யும் விரிவுரைகளும், பிரசங்கங்களும் ஒரு கிராமத்திற்கும், ஒரு நாட்டிற்கும் ஒரு தேசத்திற்கும்தான் தேவைஎன்றில்லை: இவ்வகில உலகிலுள்ளார்க்கும் அவை தேவைதான்; மேலைத் தேசத்தவரின் மண்ணாசையின் விளைவாகத் தோன்றிய யுத்த அரக்கனுக்கு எத்தனைகோடி மக்கள் பலியாயினர். முடிவில் அவர்கள் (மேலைத்



சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி.

தேசத்தினர்) கண்ட பலன்தான் என்ன? வெறும்சாம்பரும் மண்ணும் மாத்திரமே. இஃதன்றி அவர்கள் கண்ட லாபந்தான் என்ன? அந்நாகரிக மயக்க மதியுடையாரது "கண்டதே காட்சி" என்னுங் கொள்கையும், அவர்களின் அநாகரிக ஆபாசப் பழக்க வழக்கங்களும், சைவப் பெருமக்களின் இரத்தவழித் தோன்றிய நன்மக்களாகிய நீங்கள் அருவருத்து நீக்கிவிடத் தக்கனவேயன்றி ஒருபோதும் கொள்ளத்தக்கனவல்லஎன்பது உங்கள் ஒவ்வொருவர் மனத்திலும் நன்கு பதிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

"எமது சைவசமயமானது பழைமையிலும் மிகவும் பழையதுந்தான், அவ்விதமே புதுமையிலும் மிகவும் புதியதுந்தான்; ஏன்! எமது சிவமும் அப்படியேதான். இன்று உங்கள் கடவுள் வாழ்த்தில் கோளறுபதிகம் ஓதக்கேட்டதும் வீரச் சைவனின் பெருமிதச் சுவை ததும்பிய வாழ்க்கையின் நினைவு எனது உள்ளத்தில் வீறிட்டு எழுகின்றது. உண்மைச் சைவனுக்குஇவ்வுலகில்மாத்திரமல்ல, வேறெவ்வுலகத்திலும் அச்சம் என்பது இல்லை.

"வானந் துளங்கிலென்? மண்கம்ப
மாகில்என்? மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென்? தண்கடலும்
மீனம் படிலென்? விரிசுடர்
வீழ்கிலென்? வேலைநஞ்சுண்டு
ஊனம் ஒன்றிலா ஒருவனுக்
காட்பட்ட உத்தமர்க்கு"

என்று எமது பெருமக்கள் அஞ்சாமையை வலியுறுத்தினர்கள். அதுவுமன்றிச் சிவபெருமானுக்கு ஆட்பட்டவனுக்கு எக்காலமும் நன்மையே விளையுமன்றித் தீமை அணுகாது. அவன் பாதம் தீமையினைத் தருவதுமுண்டோ? எமக்கு ஞாயிறும நல்லது; திங்களும் நல்லது; செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி,

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# உபமான்யப் பிரேரணைகள்

## அரசாங்கசபையில் எடுத்தாளப்படும்

இன்று கூடும் அரசாங்கசபைக் கூட்டத்தில் 11,353,000 ரூபா வேண்டி 89 உபமான்யப் பிரேரணைகள் கொண்டுவரப்படும்.

வடமத்திய மாகாணத்தில் உள்ள பராக்கிரம சமுத்திரத்திட்டத்துக்கு ஏற்கெனவே 4 லட்சம் ரூபா செலவாகியிருக்கிறது. இதுபோதாது,இன்னும்400,000வேண்டுமென்று மிஸ்ரர் செனனாயக்கா ஓர் உபமான்யப்பிரேரணை எடுத்தாளவிருக்கிறார்.

யாழ்ப்பாணம் உப்புநீர் ஏரியை நல்ல தண்ணீர்க் குளமாக்குதற்கு 150,000 ரூபா வேண்டுமென்ற இன்னோர் உபமான்யப் பிரேரணையும் மிஸ்ரர் செனனாயக்காவினால் எடுத்தாளப்படவிருக்கிறது.

பொலிசார்க்கு வேண்டிய புதிய உபகரணங்கள் வாங்குதற்கு 174,160 ரூபா வேண்டுமென்று உள்நாட்டுமந்திரி ஸ்ரீ அ. மகாதேவா ஓர் உபமான்யப் பிரேரணையை எடுத்தாள்வார்.

இலங்கையில் உள்ள பல தெருக்களைத் திருத்திச் செப்பனிடுதற்கு 4.090,710 ரூபா வேண்டுமென்ற 4 உபமான்யப் பிரேரணைகளைப் போக்குவரத்துமந்திரி மிஸ்ரர் ஜே. எல். கொத்தலாவலை எடுத்தாளவிருக்கிறார்

# ஆசைகாட்டுகிறார

## குலரத்ன—செனனாயக்கா நட்பு!

இன்று (13—5—47) நிகழும் அரசாங்கசபைக் கூட்டத்தில் கல்விமந்திரி கன்னங்கராவின் புதிய கல்விச்சட்டத் திருத்த மசோதா விவாதிக்கப்படவிருக்கிறது. இம்மசோதாவுக்கு மிஸ்ரர் செனனாயக்கா விரோதமாக நிற்கிறார். அவருடன் பிரபல பௌத்த தலைவர் என்று சொல்லிக் கொள்ளப்படும் மிஸ்ரர் பீ. டீ. எஸ், குலரத்தின என்பவரும் சேர்ந்து, குறித்த மசோதா ஆலோசிப்பதை 6 மாதத்துக்குத் தவணையிடவேண்டும் என்ற ஓர் திருத்தப் பிரேரணை கொண்டுவர இருக்கிறார்.

செனனாயக்கா-குலரத்தின நட்புக்குக் காரணம் என்ன? இலங்கை சமசமாஜிகள் தலைவரான டக்ரர் என் எம். பெரீரா சென்றவாரம் பாணந்துறையில் நிகழ்ந்த ஓர் கூட்டத்தில் வெளியிட்டார். அடுத்த பாராளுமன்றத்தில் மிஸ்ரர் குலரத்தினவிற்கே கல்விமந்திரிப்பதவி தருவதாக மிஸ்ரர் செனனாயக்கா வாக்குப்பண்ணியிருக்கிறார்என்றும், இப்படியே இன்னும் பலர்க்கும் பல பதவிகள் அளிப்பதாக உறுதி கூறியிருக்கிறார் என்றும் டக்ரர் பெரீரா கூறினர்.

களியாட்டுவரி மூலமாக மாதந்தோறும் யாழ்ப்பாணம் நகரசபைக்கு ஏறக்குறைய 6000 ரூபாவரையிற் கிடைக்கிறது.

# கலைஉலகில்புதியஎழில்

நல்லூர் ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச் சங்கத்தின் 14-வது ஆண்டு நிறைவுவிழாவின்போது வித்துவான் க. வேந்தனார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

### தெய்வக்கலைச் செல்வம்!

அன்பர்களே! நாங்கள் தெய்வக்கலைச் செல்வம் நிரம்பியவர்கள். இறைவன் அருளில் உயிர்த்தோய்வுபெற்ற அன்பர்கள்—தொண்டர்கள்—வீரர்கள் தேடித் தொகுத்துவைத்த கலைஎழில் என்றும் எமக்குப் பெருமை அளிக்கின்றது. மெய்கண்டார் சிவஞானபோதம் கண்ணன் அருளிய கீதை, நால்வரின் அன்புமொழிகள், ஆள்வார்களின் திருவாய் மொழிகள் புத்தரின் அன்பு முழக்கம், கிறிஸ்துவின் மலைப்பொழிவு, முதலிய பல உண்மைக்கலையுணர்வுகள் ஆசியாக்கண்டத்தின் ஆன்ம உணர்ச்சியை அரண்செய்கின்றன. இந்த உயிர்க்கலை வெறியை அணுக்குண்டாலும் அழிக்கமுடியாது. எங்கள் பிறப்புரிமையான தெய்வப்பண்பை — உயிர்க் கருவில் ஊறித் தோன்றிய ஞான ஒளியை எவராலும் பறித்தெடுக்க முடியாது. கவிதாகூரின் கீதாஞ்சலியும்—வீர விவேகானந்தரின் வேதாந்த முழக்கமும், மணிவாசகரின் அன்புப்பொழிவும் வள்ளுவரின் அறிவுக்கதிரும் உலகமக்களின்முன் தலைநிமிர்ந்து நி... ...பை-ஆத்மஞான வெற்றியை அளித்துவிட்டன, எம்மை ஆக்கிவிட்டன. எங்கள் நாடு மெய்யறிவுச் சுரபி. அன்பின் அமிழ்தத் துளிகள் சிந்துகின்ற கற்பகநாடு. நாங்கள் அமரர்கள். அறிவின் நிழல் பரப்புகின்ற அன்புக்கதிர்கள். வாழ்க எங்கள் மெய்யறிவுச் செல்வம்.

### இன்று நாங்கள்

இன்று நாங்கள் அடிமைகள், அன்பு உண்டு ஆண்மைஇல்லை. அகம் உண்டு, புறம் இல்லை. அறம் உண்டு பொருளில்லை, ஈந்த கையை விரித்து இரக்கின்றோம். வாள் பிடித்த கையைக் கூப்பி வணங்குகின்றோம். பொருளும் போர்க்கலையும் இன்றி அருளும் அன்பும் தனிநின்று அதிகார வெறிபிடித்த இன்றைய உலகை ஆளமாட்டா. தருமனின் தனியறம் துரியோதனனின் அதிகாரவெறியை அடக்கவில்லை. அறத்துடன் கலந்த ஆண்மைப் போர்க்கலையே துரியோதனனை அழித்தது. நாங்கள் மேலைநாட்டாரின் புதுக்கலைகளையெல்லாம் கற்கவேண்டும். புதுப் போர்க்கருவிகள் புனையவேண்டும். பொருளாதாரக் கலைஞர்கள் பலர் எங்கள் நாட்டில் தோன்றவேண்டும். பட்டத்திற்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஹூ
சித்திரைமீ ௩0உ செவ்வாய்க்கிழமை

## சைவ சமயத்தை வளர்க்க விரும்புதல்

### III

பிற்காலத்தில் நாவலரவர்கள் மாணுக்க பரம்பரையி லுள்ள சிலர் சைவவித்தியாசாலைகளைத் தாபித்துத் தமிழ்க் கல்வியையும் ஆங்கிலத்தையும் இயன்ற வரையிற் சைவ முறைப்படி சைவப் பிள்ளைகட்கு ஊட்டி வந்தனர்; யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த சபை, இன்னும் இலங்கையின் ஏனைய பிரதான பட்டினங்களாகிய கண்டி அநுராதபுரம் திருக்கோணமலை மட்டக்களப்பு முதலிய இடங்களிலுள்ள சைவ சபை சங்கங்களும் தமிழையும் சைவத்தையும் தங்களாலியன்றவாறு பல்லாற்ருனும் வளர்க்க விரும்பி ஆங்காங்குக் கருமமாற்றின; அவ்வாறு இச்சபைகள் கருமமாற்றி வருகின்றனவெனினும், நாவலப் பெரியார் தனித்து அக்காலத்திற் செய்துவந்த சைவசமய பரிபாலனத்தைச் செய்ய இயலாவாயின எனல் தவருகாது; காரணம் நாவலப் பெரியார் சைவத்தைப் பரிபாலிக்கவும், தமிழ் மொழியை வளர்க்கவும் இறைவ னருளாற் பிறந்தார்; அவ்விரண்டன் பொருட்டுமே தம் வாழ்நாள் காறும் உழைத்தார், தாம் எவ்வகையான உண்மைகளைப் போதித்தாரோ அவ்வகையான உண்மைகளைத் தாமே கைக்கொண் டொழுகியமைமுதலிய இவைகளேயாகும். நாவலரவர்களிடத்துக் காணப்பட்ட காரணங்கள் இவைகள் மாத்திரந்தானு? இல்லை, இல்லை, இன்னும் பிரதானமான காரணமொன்றுண்டு; அப்பெரியார் சைவத்தையும் தமிழையும் எவ்வகையான இடையூறு மின்றித் தாம் வளர்த்து வருதற்குத் தமக்கு அருள்புரிய வேண்டித் தம்மையாண்டருளிய இறைவனை அல்லும் பகலும் பூசித்து வந்தார்; இதுதான் அப்பெரியார் சைவத்தையும் தமிழையும் அநுகூலத்துடன் வளர்த்தமைக்குச் சிறந்த ஏதுவானதெனலாம்;

சைவசமயத்தை வளர்த்தற்காகிய வழிவகைகளாவன: சமயப் பிரசங்கஞ் செய்தல், சமய சாஸ்திரங்களையும், பத்தியை வளர்க்கும் புராணங்கள் முதலியவற்றையும் திருக்குறள் முதலிய நீதி நூல்களையும் தேவார திருவாசகம் முதலாம் அருட்பாக்களையும் பிழையறப் பரிசோதித்து அச்சிட்டு இயன்ற வரையிற் குறைந்த விலைக்கு விற்றல், சைவ வித்தியாசாலைகளைத் தாபித்து அவ்வித்தியா சாலைகள் வாயிலாக தமிழ் மொழியையும் ஆங்கிலத்தையும் சமயாபிமானம், சாதியபிமானம் கொண்டவர்களாய், விபரீத கொள்கைகள் அற்றவராயுள்ள அறிவிற் சிறந்த ஆசிரியர் மூலமாகப் பயிற்றுவித்தல், திருக்கோயில்களையும் திருமடங்களையும் முறைதிறம்பாது பரிபாலித்தல், மேலே சொல்லப்பட்ட தானங்களிலே கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், உபதேச காண்டம், காசிகண்டம் முதலிய சைவப் புராணங்களை, நியதியோடு படனஞ் செய்தல், குருபூசைகள் செய்வித்தல் முதலியவைகளாகும்; இவற்ருேடு காலத்திற் கேற்ப, பத்திரிகைகள் வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும் சமய சம்பந்தமான விஷயங்களை இலகுவான தமிழ்மொழியில் இயற்றிக் காலந்தோறும் வெளிவிடுதலும் சைவத்தை வளர்த்தற்கு ஏதுவானவைகளாகும்.

சைவ சமயத்தை வளர்த்து வந்த பெரியாரின் இயல்பையும், அவர்கள் ஒழுகிய முறையையும், அப்பெரியார் சமயத்தை வளர்த்தற்கு ஆற்றிய தொண்டினையும் இதுகாறும ஒருவாறு சுருக்கியெடுத்துக் கூறினேம். அப்பெரியார் ஆற்றிவந்த சமயத் தொண்டு விபரீதமற்றதாதலால் அநுகூலம் பெற்றே வந்தது; ஆனல் இக்காலத்திலுள்ள சபைகளுஞ் சங்கங்களும்பெரும்பான்மையும் இந்தியாவிலே, சமயத்தை வளர்ப்பதற்கென்று விபரீதமான செயல்களைச் செய்யத் தொடங்கிக் கொண்டன; தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தினுற் சைவ வைஷ்ணவ சமயங்கள் விருத்தியாகுமென்பது இந்தியாவிலுள்ள மக்களுட் பெரும்பாலார் கொள்கை; இந்த விபரீத முயற்சியினுற் சமயங்கள் விருத்தியாகுமெனக் கொள்ளுதல் விபரீதமாகும்; அக்காலத்திலே சமண சமயம், பௌத்த சமயம் தலைப்பட்டுச் சைவவைஷ்ணவ சமயங்களைக் குன்றச் செய்ய முயன்றபோதும், அவ்வேற்றுச் சமயங்களை ஒதுக்கிச் சைவவைஷ்ணவசமயங்களைநிலைநாட்டிய திருஞான சம்பந்தமூர்த்திநாயனர்மாணிக்கவாசகசுவாமிகள்சங்கராச்சாரியர்இராமாநுஜாச்சாரியர் முதலான பெரியோர்கள் இத்தீண்டாதார் ஆலயப் பிரவேசமென்ற விபரீத முறையைக் கைக்கொண்டிலர்; காரணம் சமயத்தைத் தூயமுறையில் வளர்த்தற்கு இவ்விபரீத முயற்சி தக்க வழியல்லவென்பதுதான்.

இவைபோக, இக்காலத்திலே இங்குள்ளார் பலர் ஒருசபையையேனும் சங்கத்தையேனும் சமயோசிதமாகக் கூட்டி, சமய சம்பந்தமான சில பிரேரணைகளை நிறைவேற்றிப் பத்திரிகைகளிலும் அப்பிரேரணைகளை வெளியிட்டால், அவை வாயிலாகச் சமயங்கள் வளர்ந்துவிடுமென எண்ணிக்கொள்கிருர்கள்; இச்செயலும் சமயத்தை வளர்த்தற்கு அநுகூலமாகாதெனலாம்; இ[illegible] சமயமும் [illegible] காலகதியிற் சைவத்தைக் கெடுக்கப்போகின்றன, ஆங்கிலமொழியும் சிங்கள மொழியும் விருத்தியாகித் தமிழ்மொழியைக் கெடுக்கப்போகின்றவெனப் பெரிதும் அஞ்சுகிருர்கள்; இப்படியான அச்சம் பயனற்றது; 'ஈனர்கட் கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே'' என் றருளியுள்ளார் ஆளுடைய பிள்ளையார்; இந்த விபரீதங்களையெல்லாம் விடுத்து இறைவனருளுடன் மனம் வாககுக் காயமொத்துச் [illegible] வளர்த்தலே செய்யத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# கடைசி முடிவு என்ன?

## கூடிய சீக்கிரம் வெளியாகும்

### கடைசி முடிவு

இராஜப் பிரதிநிதி மவுன்பேற்றன் பிரவுவின் ஆலோசனைத் திட்டத்துடன் சென்றுள்ள இஸ்மே பிரபு, இப்போது பிரிட்டிஷ மந்திரிகளுடன் இந்திய அரசியல் விஷயமாகச் சம்பாஷணைகள் நிகழ்த்தி வருகிருர். அவர் வருகிற வெள்ளிக்கிழமை, பிரிட்டிஷ் அரசாங்கம், இந்தியாவின் அதிகாரத்தை எப்படி மாற்றப்போகிறது என்பதாகான கடைசி முடிவுடன் இந்தியாவுக்கு வந்து விடுவார். அந்த முடிவு, சனிக்கிழமை காலை 10மணிக்கு இந்தியத் தலைவர்களுக்கு இராஜப் பிரதிநிதியால் தெரிவிக்கப்படும். இதன்பொருட்டு, ஜனுப்ஜின்ன, லியாகத் அலிகான், பண்டிதர் ஜவஹர்லால்நேரு, சர்தார் வல்லபாய்படேல், மாஸ்டர் தாராசிங் என்பவர்களை சனிக்கிழமை 10 மணிக்கு வரும்படி இராஜப்பிரதிநிதி அழைப்பு விடுத்திருக்கிருர். மகாத்மாகாந்தி இப்போது கல்கத்தாவில் நிற்கிருர். இந்தப் பிரதான வைபவத்தை முன்னிட்டு அவர் புதுடெல்கிக்கு வரவேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்கள் அடிகளுக்குச் செய்தியனுப்பியுள்ளார். இதற்கிடையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவு என்னகும் என்பதைப்பற்றிப் பலவிதமான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. மூஸ்லிம் லீக் தலைவரான ஜின்னசாய்பு, தான் கோரியபடியே பாகிஸ்தான் கிடைத்துவிடும் என்று நம்பிக்கை கொள்ளுகிருர். இயன்றவரை இந்தியாவைத் துண்டாடாமல் ஒரே இந்தியச் சமஷ்டியை அமைக்கவேண்டும்; அதற்கு மூஸ்லிம்லீக் விரும்பாவிட்டால், சிந்து, கிழக்குவங்காளம், மேற்குப் பாஞ்சாலம் என்பவற்றைக்கொண்ட பாகிஸ்தானம்தான் அமைக்கப்படும் என்பதே பலர் நம்பிக்கையாகும்.

●

### ஜூன் 2

இந்தியா விஷயமான அறிக்கை வருகிற சனிக்கிழமை 17ம் திகதி வெளியிடப்படலாம் என்று முன்னர்த் தெரிவிக்கப்பட்டது. ஆனல் பல காரணங்களை முன்னிட்டு, அத்திகதி ஜூன்மாதம் 2ம் திகதிவரை தவணையிடப்பட்டிருக்கிறது. இப்போது பிரிட்டிஷ் பாராளுமன்றம லீவில் இருக்கிறபடியால், அது கூடும் வரைக்கே இவ்வாறு தவணையிடப்பட்டிருக்கிறது.

●

### காந்திஜியின் உதாரத்துவம்

காந்திஜி சென்றவாரம் ஜின்னவைச் சந்தித்தாரல்லவா? இந்தியாவைத் துண்டாடுவதை எப்படியாவது தடுக்கவேண்டும் என்ற நோக்கம்கொண்டே காந்திஜி ஜின்னவிடம் சென்றுர். "வேண்டுமானல் இந்தியா முழுவதையும் நீரும், உம்முடைய லீக்கருமே பரிபாலியுங்கள். நேருவும் அவருடைய சகாக்களும் இப்போது வகித்துள்ள தம் பதவிகளிலிருந்தும் விலகச் செய்கிறேன். காங்கிரசும் ஹிந்து மகாஜனங்களும், உங்கள் பரிபாலனத்துக்கு வேண்டிய ஒத்துழைப்பு எல்லாவற்றையும் அளிப்பர். ஆனல் இந்தப் பாரத பூமியை மாத்திரம் துண்டாடவேண்டாம். நாங்கள் ஒருதாய் பிள்ளைகள். தாயின் சொத்தை, அண்ணன் ஆண்டால் என்ன? தம்பி ஆண்டால் என்ன? நாம் எமக்குள்ளே சமாதானமாக வாழ்வோம். சமாதானமாகி, பிரிட்டிஷாரை நோக்கி, இதோ நாம் சமாதானமாய்விட்டோம், நீங்கள் போய்விடுங்கள் என்று கூறுவோம்'' என்றெல்லாம் காந்திஜி இரந்தாராம். முரட்டுச்சுபாவமுடைய ஜின்ன இந்த வேண்டுகோளை ஏற்கவில்லை. காரணம்: காந்திஜியின் எண்ணப்படி தாமும் லீக்கரும் அதிகாரத்திற்கு வந்தாலும் ஹிந்துக்களைக்கொண்ட இந்தியாவில் எப்படிப் பரிபாலனம் புரிவது என்று அவர் அஞ்சினமையாலேயாம். அதுவுமன்றிப் பாகிஸ்தான் இயக்கத்தை இவ்வளவு தூரத்துக்குக் கொண்டுவந்துவிட்டு, இனி அந்த நிலைமையிலிருந்து பிறழ்ந்தால், தன் அரசியல் வாழ்க்கை அதோகதியடையும் என்று ஜின்ன அஞ்சுகிருர்.

●

### ஹிந்துக்களின் ஆத்திரம்

ஜின்னவிடம் அடிகளார் இப்படி அடிக்கடி "யாத்திரை" செய்வது காங்கிரஸ்வாதிகளுக்கும், ஹிந்துசமுதாயத்துக்கும் ஆத்திரம் விளைத்திருக்கிறது. ஜின்னவைச் சென்றவாரம் காந்திஜி காண்பதற்குப் பல காங்கிரஸ் தலைவர்கள் விரோதமாக நின்றனர் இவ்வளவுகாலமும், காந்திஜி ஜின்னவைத் தேடி அவர் இருப்பிடம் போனரேயல்லாமல், ஒருதாமாவது மரியாதையையிட்டேனும், ஜின்னசாய்பு காந்திஜியிடம் போகவில்லை என்பதை அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனல், கௌரவம், அந்தஸ்து என்பனவெல்லாம் நாட்டின் நலத்துக்கேதுவான விஷயங்களிற் குறுக்கிடக்கூடாது,மனிதனைமனிதன் போய்ப் பார்த்துப் பரஸ்பரம் அளவளாவுவதில் உயர்வு தாழ்வு ஏற்படமாட்டாது என்றெல்லாம் அடிகளார் புத்தி கூறினராம். ஆனல் இந்த நல்ல அறிவும், அத்தகைய பரந்த ஞானமும் ஜின்னசாய்புவிற்கும் இருந்தால்தானே!

●

### வங்கப்பிரிவினை

மகாத்மாகாந்தி இப்போது வங்காளத்தில் தங்கியிருக்கிருர். வங்காளத்தைப் பிரிப்பது நல்லதல்ல என்று அவர் அபிப்பிராயப்படுகிருர். இவ்விஷயமாக ஸ்ரீஜுத் ஸரத் சந்திரபோசும் இதேவித அபிப்பிராயத்தையே கொள்ளுகிருர். கிழக்கு வங்காளத்தில் ஹிந்துக்களுக்கு மூஸ்லிம்கள் அநியாயம் விளைத்துவிட்ட போதிலும், இரு சமூகத்தினரும் குரோத மனப்பான்மையை விடுத்து நாட்டின் நலம்கருதி உழைக்கவேண்டும் என்றும், இவ்விஷயமாக, வங்கப் பிரதமர் ஷூராவர்த்திக்குத் தம்மாலான உதவி எல்லாம் செய்வதாகவும் மகாத்மா கூறுகிருர். பிரதமர் ஷூராவர்த்தியும், வங்காளத்தைப் பிரிக்கக்கூடா

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# தமிழகத்துத் தவப்புதல்வன்

## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதி

( க. இராமச்சந்திரன் )

(இன்று தமிழ் நாடெங்கும் யோகி ஸ்ரீ சுத்தானந்தரின் 50-வது ஜெனன நாள் கொண்டாடப்படுகிறது. வீரகவி எம் சுப்பிரமணிய பாரதிக்குப் பின் தமிழ்நாட்டு மக்களைத் தட்டி யெழுப்பி, பராசக்தி யருள் பெற்றுப் பலவித தொண்டாற்றி, இன்று புதுவையில் அரவிந்தர் ஆச்சிரமத்தில் நின்று ஹிந்து ஸ்தானத்தின் சுபீட்சம் கருதி யோக நிலையில் இருப்பவரான யோகி சுந்தானந்த பாரதியின் வாழ்க்கையைப் பற்றி அன்பர் ஸ்ரீ இராமச்சந்திரனல் எழுதப்படும் இக்கட்டுரை சமயோசிதமானது. யோகி சுந்தானந்தர், தமிழுக்கும் பரந்த ஹிந்து ஸ்தானத்துக்கும், உலகத்துக்கும் பணியாற்ற இன்னும் பன்னெடுங் காலம் வாழப் பிரார்த்திக்கிறோம்.]

முத்தான தமிழ்மொழியின் முப்பெருமை
மூவுலகும் முழங்கும் வண்ணம்
பத்தாவ தாண்டுதொட்டுப் பயன்கருதாப்
பணியதனைத் தவமாய்க் கொண்டே
நித்தியா னந்தநிலை தனில்மோன
நிஷ்டையுடன் நிலைத்து நிற்குஞ்
சுத்தா னந்தப்பெரியார் சுகுணமல
ரிணையடிகள் சிரமேற் கொள்வாம்.

"தவம்பெற்ற தவம்" எனப் பெரும் பேராசிரியர் சுவாமிநாதையர் அவர்களாலும், 'வாழ்வையே தவத்திற்கு நிலைக் களனாக்கியவர்' என்று மகான் வ. வெ. சு. ஐயா அவர்களாலும், பாராட்டப் பெற்ற யோகி சுத்தானந்தர் அவர்கட்கு ஐம்பது வயது இன்று நிறைவாகின்றது. இஃது ஓர் பொன்விழாவாக இந்தியாவிலும் இலங்கையிலும் பல இடங்களில் காலைக் கொண்டாடப்படும் புதுவையிலிருந்து சுவாமிகளின் ஆசியுடன் வெளிவரும் 'பாரத சக்தி'யின் ஆண்டுமலர் இப்பொன் விழா மலராக இவ்வாரம் நாடெங்கும் பரவும்.

சென்ற கொடிய உலகயுத்தங் காரணமாக நேர்ந்த காகிதப் பஞ்சமும் கட்டுப்பாடும் இதுவரையில் தீர்ந்திருப்பின், சுவாமிகளின் விரிவான ஆத்மானுபவ வரலாறு "ஆத்மசோதனை' என்னும் பெயருடன் பெரிய ஓர் நூலாக அச்சேறி வெளிவந்திருக்கும் தமிழ்நாடு செய்த தவப் பயனால் உதித்த இப்பெரியார், தமது ஆறு வயது தொடக்கமாயுள்ள அநுபவச் செயல்களை யெல்லாம் நாட்குறிப்புகளாகவும், கட்டுரைகளாகவும், சரிதைகளாகவும் வரைந்து குவித்திருக்கிறார்கள். அவை யெல்லாம் அச்சேறி வெளிவரும் நாள் தமிழ் நாட்டுக்கு ஓர் நன்னளாகு மென்பதில் ஐயமில்லை. இந்துசாதன வாசகர்கட்கு இன்பம் அளிக்கும் நோக்குடன் இப்பெரியாரின் வரலாற்றை மிகவும் சுருக்கமாய் இங்கு தருகின்றோம்.

### ஜெனனம்

ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் 31-ந் தேதி (11-5 1897) புதன்கிழமை, கடகலக்கினமும் உத்தர நட்சத்திரமும் பொருந்திய சுபவேளையில், சிவகங்கையை அடுத்த பனையூர் என்னும் கிராமத்தில் சடாதரரும் காமாட்சியம்மையாரும் செய்த அருந்தவப் பேற்றினல் அவர்களின் நான்காவது குழந்தையாக சுத்தானந்தர் அவதரித்தார்.

தந்தையார் கோடிக்கணக்காகப் பஞ்சாட்சரி ஜபித்துச் சித்தியடைந்த பக்தி யோகி. தாயாரும் அதேவிதம் ஜபஞ் செய்து மந்திரத் திறமையடைந்து பின்னளில் நல்ல ஞானியானவர் சுத்தானந்தரின் குழந்தைப் பருவம் பாட்டியாராகிய மீனட்சியம்மையாரின் மடியில் இருந்து பாகவதக் கதைகளையும், தமிழ்நாட்டுச் சரித்திர நிகழ்ச்சிகளையும், வேதாந்தப் பாடல்களையுங் கேட்பதிலும், பாட்டனராகிய வக்கீல் மகாதேவையர் பக்கத்திலிருந்து அவரைப்போல் கண்மூடித் தியானஞ் செய்வதிலும் கழிந்தது பிறக்கும் போதே சுத்தானந்தருடன் கடவுள் அன்பும், தாய்மொழிப் பற்றும், தேசபக்தியும் கூடிப் பிறந்தனவெனலாம். இம்மூன்றுக்குமாகவே தம் வாழ்வு அர்ப்பணஞ் செய்யப்பட வேண்டுமென்று தமது ஆறாவது வயசிலேயே வைராக்கியங் கொண்டுவிட்டார். பூர்வசென்ம வாசனையால் ஒன்பதாவது வயசில் குரு உபதேசமும்பெற்றனர். அதே வயசில் கவிப் புலமையும் உடையராயினர்.

### இல்லற மேன்மை

சாதிமத விவகாரங்களெல்லாம் மனச்சந்தையின் கூச்சலெனக் கண்டு, பதினறு வயசில் பூணூலையும் விலக்கித் துறவுவேடம் பூண்டார். அக்காலத்தில் அவர் விவாகத்தை மறுத்து தமையனருக்கெழுதிய கடிதம் ஒன்றே அவரது உயர்ந்த கொள்கைகளையும், உன்னத லட்சியத்தையும் அறிந்துகொள்வதற்குப் போதிய சாசனமாகும். அதில் அவர், வள்ளுவருக்கு வாசுகி வாய்த்ததுபோலும், இராமகிருஷ்ணருக்கு சாரதாமணி தேவியார் கிடைத்ததுபோலும். தமக்கு தமிழ்நாட்டில் ஓர் உத்தமப் பெண்மணி கிடைக்காதென்று விவாகத்தை மறுத்தாரெனினும் 'இல்லறம் ஈசனருளா லமைந்த நல்லறம்' என்பதையும், இல்லறத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால் விண்ணின்பம் பெறலாம் என்பதையும் ஏற்றுள்ளனர்.

### ரமண—அரவிந்த தரிசனம்

பின்னர் சில ஆண்டுகளாக கல்வித் தொண்டு, கதர்த்தொண்டு கலைப்பணி, ஹரிஜன சேவை, குருகுல வாழ்வு, பத்திரிகைத் தொண்டு முதலியவற்றில் ஈடுபட்டார், இடைக்கிடை ஊரூராக நடந்து சென்று சுத்த சமரஸ சன்மார்க்க போதனையுஞ் செய்தார் முப்பதாவது வயசில் ஞானப்பசி வாட்ட பரமகுருவை நாடி அத்யாத்ம விஷயங்களில் ஏற்பட்டுள்ள சந்தேகந் தெளிய அவாவினர். அந்த மனோநிலையிலிருக்கும் நாளில், ஓர் தினம் தியானத்திலமர்ந்த வேளையில் பகவான் ஸ்ரீ ரமணமஹரிஷிகளின் காட்சி கிடைத்தது. உடனே திருவண்ணமலைக்கோடிச் சென்று பகவானின் அருட்பார்வைக்காளாகி, அவரைச் சிவலிங்க ரூபமாய்த் தரிசித்து, சிவானுபூதிச் செல்வரானர். சில காலம் அங்குள்ள விருபாஷி குகையிலே மோன சமாதியில் இருந்துவிட்டு புதுவையையடைந்தார் ஸ்ரீ அரவிந்தக் காந்தம் அவரை முற்றிலும் வசீகரித்துவிடவே, அவரது ஆச்சிரமத்தில் சென்ற பதினறு ஆண்டுகளாக தனி மோனதவத்திலிருந்து அரிய தமிழ்த் தொண்டும் சைவத்தொண்டும் ஆற்றுகிறார். அவர் இயற்றிய வசன நூல்களும் கவிதைகளும் அளப்பில. இதுவரையில் அச்சேறி வெளிவந்த நூல்கள் ஓர் தனிவாசகசாலைக்குப்போதுமானவை. அச்சேறாமல் புதுவையிலும், இராமச்சந்திரபுரம் அன்புநிலையத்திலும், இருப்பவை முந்நூற்றுக்கு மேலாகும். தமிழில் மட்டுமல்ல, ஆங்கிலம் தெலுங்கு, சமஸ்கிருதம், பிறெஞ்சு முதலாம் மொழிகளிலும் நூல்கள் பல வரைந்துள்ளார்.

### அருள்பெற்ற உண்மை

'அருள்பெற்ற உள்ளத்தில் அழகுத் தெய்வத்தைக் கண்டவனே கவி. அவன் பாட்டே பாட்டு. அவன் கனவே கலை, இயற்கை அன்னைக்கு அவன்கவிக்கும் திருமுடியே கவிதை" என்ற இலக்கணங் கொண்டு, உண்மைக் கவியைத் தேடுவோமானல், கவிச்செல்வத்தில். நிரம்பியதமிழ் மொழியில், கம்பனுக்குப் பிறகு கவியின் சிகரத்தை எட்டித் தொட்டவர்கள் இருவரே என்ற உண்மை தெற்றென விளங்கும். ஒருவர் சுப்பிரமணிய பாரதியார்; மற்றையவர் சுத்தானந்த பாரதியார்; முந்தியவர் வீராவேசத் தேசியக்கவி; புரட்சிப் புலவர். அவரையும் அவர் பாடல்களையும் அவர் உடல்கொண் டுலாவும்போது புறக்கணித்த பண்டித உலகு இன்று அவர் கவிதையை உச்சிமேல் வைத்து, ஊர்வலம் வந்து விழாக் கொண்டாடுகிறது. பிந்தியவர் இன்னும் எம்முன் உள்ளார் அவரின் கவிதையைப் பொறாமை காரணமாகக் குறைசொல்லும் பண்டிதர் மிகச் சிலரே. அந்தமட்டில் அவரது அத்யாத்ம யோகசித்தி அவரது பாடல்களைக் காப்பாற்றியுள்ளதெனலாம். பராசக்தியின் திருக்காட்சி பெற்று அவரியற்றிய பாரத சக்தி மஹாகாவியம்' தமிழ்மொழி உள்ள வரையும் சிறப்புற்றோங்கும். பாரதபூமி பூரண விடுதலை" டைந்த பின்னர்த்தான் அக்காவியத்தின்தனிப்பெருமையைத்தமிழர் நன்குணர்வர்.

(வரும்)

# இன்னோர் அறைகூவல்

## செனனாயக்கா பிரதம மந்திரியாவாரா?

சென்ற சனிக்கிழமை கொழும்பு நகர மண்டபத்தில், இன்று அரசாங்கசபையில் எடுத்தாளப்படவிருக்கும் கல்வித் திருத்த மசோதாவுக்கு ஆதரவு அளிக்குமுகத்தால் ஓர் பெரிய கூட்டம் நிகழ்ந்தது. அதில் இலங்கைச் சமதர்மக் கட்சியும், சமசமாஜக் கட்சியின் இருபிரிவுகளும் பங்கெடுத்தன.

கத்தோலிக்கரின் அதிமேற்றிராணியாருடனும் செயின்ற் தோமஸ் கல்லூரிப் பிரதமாசிரியருடனும் ஓர் இரகசிய உடன்படிக்கையைச் செய்துகொண்டு மிஸ்ரர் செனனாயக்கா இக்கல்வித் திட்டத்துக்கு மாறாக நிற்கிறார் என்ற செய்தியை அவர் (மிஸ்ரர் செனனாயக்கா) இப்போது மறுக்கிறார்; மிஸ்ரர் செனனாயக்கா இப்படி மறுப்பது சுத்தப் புரட்டுத்தனம். இப்படியான ஓர் உடன்படிக்கையைச் செய்தார் என்று நிரூபிக்கத் தான் ஆயத்தம் என்று டக்ரர் என். எம். பெரேரா கூறினர்.

டக்ரர் கொல்வின் ஆர் டி. சில்வா பேசுகையில், மிஸ்ரர் செனனாயக்கா அடுத்த பாராளுமன்றத்திலே பிரதம மந்திரியாக வர எண்ணுவது பகற்கனவு என்றும், கேவலம் ஓர் அங்கத்தவனக வருவதே சந்தேகத்தி லிருக்கிறதென்றும் கூறினர்.

# பஸ் எரிபட்டது!

## சென்றவாரம் நிகழ்ந்த அக்கிரமம்

பஸ்தொழிலாளர்பலர் இன்னும்வேலைக்குத் திரும்பவில்லை. சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தி லிருந்து, பலாலிக்குச் செல்லும் பஸ், கோண்டாவிலில் நிறுத்தப்பட்டது. தெருவுக்குக் குறுக்கே பெரிய கயிறு கட்டப்பட்டிருந்ததைக் கண்ட பஸ் சாரதி பஸ்ஸை நிறுத்தியபோது, ஆயுதபாணிகளான எண்மர் அங்கு தோற்றி, பஸ்ஸில் இருந்த பிரயாணிகளை இறக்கினர். உள்ளே யிருந்த சாமான்களை அங்குமிங்குமாக வீசிவிட்டு, சாரதி கண்டக்ரர், என்பவர்களை நையப் புடைத்தனர். சாரதியும் கண்டக்ரரும் பயந்து ஓடிவிட, வந்த எண்மரில் ஒருவர் பஸ்ஸில் ஏறி யந்திரத்தை இயக்கித் தன் கூட்டாளிகளுடன் பஸ்ஸைச் செலுத்திக்கொண்டு சென்றார். இவ்விஷயம் பொலிசார்க்கு உடன் அறிவிக்கப்பட்டதும் மாகாணப் பொலிஸ் தலைவரும் உதவித் தலைவரும் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை நிகழ்த்தினர்.

இதன்பின், குறித்த பஸ் சங்கானையில் ஓர் இடத்தில் எரிவதாக அறிவிக்கப்பட்டது. இந்த அட்டூழியத்தைச் செய்தவர் யார் என்பது இன்னும் வெளியாகவில்லை.


# உடனே தேவை

"சுதந்திரன்"

## தினசரிப் பத்திரிகை

'சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்'' சொந்தக்காரர்களால் சமீபத்தில் கொழும்பில் ஆரம்பிக்கப்படவிருக்கும் "சுதந்திரன்" தமிழ்த் தினசரிப் பத்திரிகைக்கு கீழ்க்காணும் உத்தியோகத்தர்கள் தேவை.

1 உதவி ஆசிரியர்கள்
2 தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள்
[உதவி ஆசிரியர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் ராய்டர் செய்திகள், அசோசியேற்றட் பிரஸ் செய்திகள் விளங்கி மொழி பெயர்ப்பதில் திறமை யுடையோராய் இருப்பின் விசேஷ கவனத்துக்குடையவராவர்]
3 அச்சுப்பிழை திருத்துவோர்கள்.
4 இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் நமது தினசரி, வாரப்பத்திரிகைகளை விற்பனை செய்ய ஏஜண்டுகள்.
5 அச்சுக் கோர்ப்பவர்கள்
6 இராமேற்பார்வையாளர்கள். (Night Supervisors)
7 அச்சுக் கோர்க்கும் வேலை மேற்பார்வைக்காரர்கள்.
8 முக்கியமான பட்டினங்களில் நிருபர்கள்

குறிப்பு

1 கல்வி, வயது. அநுபவம், நன்னடத்தை இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பத்திரங்களின் பிரதிகள் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்
2 தேவையான சம்பளம் இவ்வள வேன்பது விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடல் வேண்டும்.

மனேஜர் "சுதந்திரன்"
194 A சில்வர்சிமித் ஸ்றீற்
கொழும்பு 12

Mis 26 13—16-5-47


# இறுதிப் போர்க்களம்!

## மீரிகமத்தில் செனனாயக்கா தோற்பாரா?

இலங்கைப் பௌத்த குருமார் சங்கத்து ஆதரவில் மீரிகமத்தில் (மிஸ்ரர் செனனாயக்காவின் தொகுதி) சென்ற வெள்ளிக்கிழமை ஓர் பெரிய கூட்டம் நிகழ்ந்தது. அதில் தலைமை வகித்த ஆனந்தசாகரதீரோ என்னும் பௌத்த சந்நியாசி, இந்தச் சங்கத்தில் 15 000 பௌத்த பிக்குகள் சேர்ந்திருக்கின்றனர் என்றும், அவர்கள் மீரிகமத் தொகுதியில் இருந்து மிஸ்ரர் செனனாயக்காவைத் தோல்வியடையச் செய்யக் கங்கணம்கட்டி நிற்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

தர்மரத்தினதீரோ என்னும் பௌத்த பிக்கு பேசுகையில். செனனாயக்கா-கொத்தலாவலைக் கோஷ்டி அவ்வளவு பலம்வாய்ந்ததல்லவென்றும், அவர்களுக்கு முந்தியிருந்த வலிமையெல்லாம் இனி நடக்கவிருக்கும் தேர்தலில் கைமாறிவிடுமென்றும், நெப்போலியனின்வலிமையையெப்படி வாட்டர்லூ என்னும் களம் சிதறடித்ததோ அதேபோலமீரிகமத்தேர்தற்களமும்செனனாயக்காவின் அதிகாரத்துக்கும், செல்வாக்குக்கும்முற்றுப்புள்ளி வைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அநுராதபுரத்திற் சென்றவாரத்திறுதியில் ஸ்ரீராகுல என்னும் பௌத்த சந்நியாசியின் தலைமையில் டக்ரர் கொல்வின் ஆர் டி சில்வா நிகழ்த்திய ஓர் பிரசங்கத்தில் மிஸ்ரர் செனனாயக்காவின் செல்வாக்கை ஒழித்தால்தான் இலங்கையில் உள்ள ஏழைகள் சுபீட்சம் அடைவர் என்றும், அதற்கென ஓர் நிதி திரட்டுதல் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

# திரும்பின!

## சிங்கப்பூர்த் திரவியம்

ஜப்பானியர் மலாய்நாட்டை ஆக்கிரமித்தபோது சிங்கப்பூரிலிருந்த பல கோடி ரூபா பெறுமதியான தங்கம், வைரங்கள், வெள்ளி முதலாம் ஆபரணவகைகள் அங்கிருந்து அகற்றி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன. இவை 1942-ம் ஆண்டு தொடக்கம் இலங்கைத் திறைசேரியில் மிகுந்த பாதுகாப்புடன் இருந்தன. விலை உயர்ந்த இப்பொருள்களை இலங்கையரசாங்கம் சென்றவாரம் மீண்டும் சிங்கப்பூருக்கு அனுப்பிவிட்டது.

இத்திரவியங்கள் 12 இருப்புப்பெட்டிகளில் அடைத்துக்கொண்டு செல்லப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1-ம் பக்கத் தொடர்ச்சி

# கலையுலகிற்புதியஎழில்

கும் பதவிக்குமாக ஆங்கிலத்தைக்கற்கும் நம்மவர்களே அடிமையின் ஆணிவேர்கள். இவர்களால் நாம் உய்வடைய முடியாது. M. A., B. A. M. Sc, B. Sc முதலிய ஆங்கிலப் பெரும் பட்டங்களை, தமது வயிற்றுப் பிழைப்புக்காகவே பயன்படுத்துகின்றவர்கள் எங்கள் யாழ்ப்பாணத்திற் பலர். இவர்களால் விடுதலைப் போர் ஆற்றமுடியுமா? இந்தியா முதலிய முதலிய சுதந்திரவெறிபிடித்த நாடுகளில் - அமெரிக்கா முதலிய சுதந்தரநாடுகளில் ஆங்கிலத்தைக் கலை ஆர்வத்துடன் கற்கின்றனர். உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்தில் நிரம்பிக்கிடக்குங் கலைச்செல்வத்தைத் தமது தாய்மொழியில் பெயர்க்கின்றனர். தாய்மொழியில் உள்ள சிறந்த நூல்களை ஆங்கிலத்தில் பெயர்க்கின்றனர். ஆராய்கின்றனர். எங்கள் நாட்டுப் பட்டதாரிகள் தங்கள் பட்டங்களுக்கு எவ்வளவு சம்பளத்திட்டம் என ஆராய்கின்றனர். ஆங்கிலநாகரீகம் என்பதை, உடையும் உணவும் உரையும் என்றே எண்ணுகின்றனர். ஆங்கில மக்களின் உள்ளுணர்வை - சுதந்தர வெறியை - வீரத்தை கலையுய்வையெல்லாம் ஆங்கில நாகரீகமென இவர்கள்—எங்கள் நாட்டுப் பட்டதாரிகள்—எண்ணுவதில்லை. இவர்நிலை மிக வருந்தத்தக்கது. மேடைகளில் மட்டும் வளைந்த பிரம்புகளைக் கைகளில் தொங்கவிட்ட கோலத்துடன் ஏறிநின்று சுதந்தரம்-வீரம் தியாகம் சமத்துவம் சகோதரத்துவம் எனும் சொற்களைப் படஞ் சொல்வார்கள். இவ்வளவில் இலங்கை விடுதலைபெற்றுவிடுமாம். வெட்கம்! வெட்கம்!! எல்லோரும் சேர்ந்து நடிக்கின்றோம். ஒரே நடிப்பு. ஆங்கில உத்தியோகம் இல்லாவிட்டால் அரைக்கணமும் சீவியஞ் செய்யமுடியாத தலைவர்கள் எம்மை விடுதலை செய்ய மாட்டார்கள். படிப்பும் பட்டமும் பதவியும் குடிக்குங் கஞ்சிக்கே உரியன என நாம் எண்ணும் அளவும் அடிமைகளே. சுதந்தரம் என்றால் பேசும் படக்காட்சி என்று எண்ணுகின்றீர்கள். இந்த நூற்றாண்டு செயல்வீரர்களின் நூற்றாண்டு. தியாகிகளின் நூற்றாண்டு.

### தமிழும் சைவமும் (அன்று)

யாழ்ப்பாணம் செந்தமிழ்ச் சிவக்கலைச் செல்வம் சிறந்தநாடு. நாவலனின் வீரத்தில் ஊறிய நாடு. நால்வர் அருள்மொழிகள் நிழல்இட்டநாடு. எங்கள் யாழ்ப்பாணத்தின் தென்றல்காற்றிலும் கிணறுநீர் ஊற்றிலும் இன்றும் செந்தமிழ்ச் சிவமணம் கமழ்கின்றது, தமிழ் மரபும் சிவமரபும் தழைத்தநாடு. நாவலர் கால்வழி மாணவர் மாணவர்களாகிய பல பெரும் புலவர் மரபினர் வாழ்கின்றநாடு. எட்டிற்கிடந்த நூல்களின் உண்மைக் கருத்துக்கள் எல்லாம் யாழ்ப்பாணப்பகுதிப் பாட்டிமாரின் நாக்கில் இன்றும் தவழ்கின்றன. கந்தபுராணச்சண்டை பாரதச்சண்டை பெரியபுராணச் சண்டை பிடிக்கின்ற பெண்கள் இன்றும் புலோலியில் வாழ்கின்றார்கள். மற்றைய பகுதிகளிலும் வாழ்கின்றார்கள். ஆறுமுகநாவலர், தாமோதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை · வடகோவைச் சபாபதிநாவலர் சிவசம்புப்புலவர், குமாரசாமிப்புலவர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, கதிரவேற்பிள்ளை, உரையாசிரியர் வேற்பிள்ளை சுவாமிநாத பண்டிதர், பண்டித மகாலிங்கசிவம் முதலிய பலபெரும் புலவர்கள்-தொண்டர்கள் சிறந்து விளங்கிச் செந்தமிழ்ச் சிவத்தொண்டு ஆற்றித் தென்னாட்டினும்-மேல்நாட்டினும் தம் புகழ் நிறுத்திச் சென்ற பெருமையைப் பெற்றது எங்கள் யாழ்ப்பாணம். தென்னாட்டில் உள்ள தமிழ்ப்புலவர்கள் முன்னெல்லாம் செந்தமிழ்ச்சுவை கண்டுவக்குமாறு யாழ்ப்பாணத்தை அடைந்தார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்ப்புலவர்களின் இல்லங்கள்தோறும் சென்று அவர்களைக்கண்டு பழகிக் கலந்துரையாடி யாழ்ப்பாணத் தமிழ் மரபைச் சைவ ஒழுக்கத்தைத் தெளிந்தார்கள். மேடைப் பேச்சுக்கள் யாவும் யாழ்ப்பாணக் கல்விநிலைக்கும் மரபுக்கும் ஏற்றதாகுமோ வென்ற அச்சத்துடன் நிகழ்த்தினர்கள் நாவலன் பிறந்த நாட்டில் அவ்வழிவழி மாணவர்கள் வாழ்கின்ற நாட்டில் நாவெடுத்துப்பேச நடுங்கினார்கள்.

### இன்று

இன்று கேட்பாரில்லை. தமிழ்மரபும் சிவமரபும் தலைகீழ் ஆகப் புரண்டன தமிழ் வளர்த்த யாழ்ப்பாணம் தமிழ்ப்பண்பை மறந்தது. புலமையற்ற-பொருளற்ற-ஆக்கமற்ற பெரும் போலிப்பேச்சுக்களை வரவேற்கின்றது. சிரிப்பான வெறுங் கட்டுக்கதைகளைக் கேட்டு மட்டுக்கடங்காத மகிழ்ச்சி அடைகின்றது; தேசீய உணர்ச்சியும் சுதந்தரவெறியும் அலையிடுகின்ற இன்றும் எட்டுணையும் உணர்ச்சியின்றி பன்னூற்றுக்கணக்கான பணத்தை பார்த்துச் சிரிக்கும் பேச்சுக்குப்-பயனற்ற-பேச்சுக்குக் கொடுக்கின்றோம்.

### எங்கள் சமயகுருமார்

இத்தாலியில் பாப்பாண்டவர் பேசுகின்றார் எனில் உலகமே அதனை வரவேற்கின்றது. கேட்க ஆர்வப்படுகின்றது. எங்கள் சமயகுருமாரில் அங்ஙனம் பெருமை எம்மாற் கொடுக்கப்படவில்லை. ஓர் கிறிஸ்தவகுரு M. A. அல்லது B. A. பட்டதாரியாக இருக்கின்றார் பலகலைகளையும் அறிந்து ஆராய்கின்றார். கிறிஸ்தவ சமய மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றார். அவர் கூறுகின்ற அன்புகலந்த ஆணையின் மடியே பல்லாயிரவர் ஒரே செயலில் ஒன்றுபடுகின்றனர். பணிசெய்கின்றனர் எங்கள் சமயகுருமாரை நாம் எவ்வளவில் மதிக்கின்றோம், பணிகின்றோம், எங்கள் நிலையினும் அவர்களைத் தாழ்த்தி வைத்திருக்கின்றோம். அவர்களுக்குப் போதிய வருவாயுமில்லை அறிவுமில்லை. குருத்தொழிலில் நின்று தொண்டாற்றும் அந்தணர்களை அரசியல் உத்தியோகத்தில் இருக்கின்ற ஏனைய அந்தணர்கள் மதிப்புச்செய்யார் இகழ்வார். வேறொரு தொழிலும் ஆற்ற முடியாத அந்தணர்களே கோவிற்பூசை ஆற்ற முன்வருகின்றனர். இக்குருமரபு எம்மால் மதிக்கப்படுமளவும் எங்கள் சமயம் முன்னேறமாட்டாது. சந்தானகுரவர்மரபும், சமயகுரவர் மரபுமே எங்கள சைவசித்தாந்த நெறியின் உயிர் நாடி என்பதை நினைவூட்டுகின்றேன்.

### பேசும்படம்

இனிப் பேசும்படங்களில் எங்கள் சமயத் தெய்வம் படும்பாடு மிகக் கொடிது ஐந்து நிமிடங்களுக்குப் பத்துக் கடவுளைத் திடீர் திடீர் என இறக்குகின்றார்கள். புராணக்கதைகளைச் சமயவரம்பு சிதைந்த வகையில் எடுத்து மிக இழிவான ஆபாசக்காட்சிகளுடன் இணைத்துக் காட்டுகின்றார்கள். நாங்கள் எதற்குஞ் சம்மதம். படத்தில் சிரிப்பு இருக்கவேண்டுமென்பதே எங்கள் தவம். எங்கள் சமய குருமாராகிய அந்தணர்களைப் படமுதலாளிகள் தங்களால் இயன்றவரை சிரிப்புச் சுவைக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். பிறமத குருமாரைப் படமுதலாளிகள் இங்ஙனம் பயன்படுத்தப் பயப்படுகின்றார்கள். பயன்படுத்தினால் படமாளிகைகளே எரியூட்டப்படும். நாங்கள் பெரும் பொறுமையாளர்கள். இந்தியாவின் வடபகுதிகளில் பேசும்படம் கலைப்பண்புடன் நடிக்கப்படுகின்றது எங்கள் தென்னாட்டில் கலையைக் கொலைபுரியும் புலைப் பண்புடன் கையாளப்படுகின்றது. அடாத காதல்காட்சிகள் இல்லாத தமிழ்ப்படங்கள் ஓடின அன்றே நின்றுவிடும். ஆடையின்றி ஒரு பெண் நடிக்கின்றாள் என்றால் ஆயிரக்கணக்கான மக்கள் எள் போடவும் இடமின்றிப் படமாளிகையை முற்றுகையிடுவார்கள். கலையின் புதிய எழிலை வளர்க்கும் சிறப்பில் நாங்கள் நிற்கும் இடத்தை எண்ணிப் பாருங்கள்.

### இளைஞர்கள்

இளைஞர்களே! இனிவரும் உலகின்—கலை சுதந்தரம் எனுமிவைகள் உங்கள் உடைமைகள். நீங்கள்தான் புதிய கலையின் எழிலை வீசும் புத்திளங்கதிர்கள். இனி வரும் உலகம் உங்களை உறங்கவிடாது. உணவுக்கும் உடைக்குந்தான் கலை என்ற உணர்வைக்கொள்ளவிடாது, பணமும் பட்டமும் உலகையினி ஆளமாட்டா அன்பும், தொண்டும் ... ஆண்மையுந்தான் ... ஆளும் பண்புகள். பேச்சும் எழுத்தும் செயலில் மலரவேண்டும். கல்விக் கலை வேட்கையுடன் தேடுங்கள். எங்கள் தலை வீழ்ந்தாலும் அறம்வாண்ட அதிகாரவெறியை அஞ்சோம்என்று நெஞ்சில் அறைந்து கூவுங்கள். கொடியவரைக் கொல்லுங்கள் பொய்வாழ்வு வேண்டாம். உடம்பில் இருந்து, உண்மைக்காக உயிரை விடுதலே உயர்ந்த வீரம் என்று கொள்ளுங்கள். உங்கள் சுதந்தரத்தலைவன் நேரு. அவன் கொள்கைகளைப் போற்றுங்கள். ஐந்தடுக்கு மாடத்தில் வீற்றிருந்து இந்திரச் செல்வந் துய்க்கும் வாழ்வைத் துறந்தும், கமலாநேருவைச் சிறையில் பலி செய்தும் இந்திராநேருவைச் சிறையிற் புக விடுத்தும் தாமும் பலகாற் சிறைபுகுந்தும் இன்றளவும் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் இந்திய மக்களின் விடுதலைக்கே தியாகம் புரிந்து நிற்கின்ற நேருவே உங்கள் சுதந்தரத் தெய்வம். அவனின் அஞ்சாமை தவழும் நெஞ்சமலையில் நின்று சுதந்தர முழக்கஞ் செய்யுங்கள்.

### பெற்றோர்களே!

பெற்றோர்களே உங்கள் கடமை மிக மிகப் பெரிது. சுதந்தரக்கலை எழில் வீசுகின்ற வீரத்தோன்றல்களாக உங்கள் குழந்தைகளைப் புதுக்குங்கள். ஆக்குங்கள். பெரும் போர் நெருப்பினால் வதக்கப்பட்டிருக்கின்ற இச்சின்னஞ்சிறு குழந்தைகள் தான் வாவிருக்குஞ் சுதந்தர உலகின் தியாகிகள், வீரர்கள், தொண்டர்கள், உங்கள் அன்புந் தவமும்தான் இவர்களை ஆக்கவேண்டும். விஞ்ஞானகலை உணர்வு இவர்களை ஆக்கப் பணிபுரியதக ஆக்கும் அன்புச்சாயல் உங்கள் உள்ளத்தில் நின்றுதான் இவர்கள் உள்ளத்தில் ஊறவேண்டும். தாய்மார்களே! உங்கள் வட்டிற் சோற்றிலுந் தொட்டிற் பாட்டிலும் வீரமும் தியாகமும் விளங்கவேண்டும் பால் நினைந்து ஊட்டுந் தாய்மார்களாக நீங்கள் சிறக்கவேண்டும் பால்ஊட்டும்பொழுதே பிள்ளையின் ஆக்கங்கருதி ஊட்டவேண்டும். தாய்மை உலகே எம்மைத் தாக்கிவிடும். தாய்மாரின் உள்ளந்தான் உலகம். வீரத்தாய்மார்கள் என்றால் வெறிபிடித்த கொலைக்காரிகளல்லர். என்ன துன்பம் வந்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது உண்மையைக் காப்பவர்களே வீரத்தாய்மார்கள். பெண்மையென்பது வெறும் தண்ணீரல்ல, அஞ்சிக் கெஞ்சும் அடிமையல்ல. உயிர்போகிலும் உண்மையைக்-கற்பைக் காப்பாற்றுகின்ற வீரக்கனல் சுதந்தரநெருப்பு. தாய்மார்களே! இனிவரும் உலகின் சுதந்தரவீரர்கள் உங்கள் உள்ளப் பண்புகள். நீங்கள் பொருளற்ற வெறும் நாகரீகக் கோலங்களைக்கண்டு மயங்காதீர்கள். அறிவுடை உலகம் உங்களை வரவேற்கின்றது. கலை உலகின் புதிய எழில் உங்களை வாழ்த்துகின்றது. உங்கள் குழந்தைகளை அழைக்கின்றது. அவர்கள் கலையினால் ஆக்கப் ... பெருமை நிலை ... வீறுக்கவர்கள்.

## காணிவிற்பனவு விண்ணப்பப் பத்திரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் பராபரிப்புத் தத்துவ வழக்கு நெ. 303-ல் எனக்குக் கிடைத்த உத்தரவுப்படி கீழ் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் மாவிட்டபுரம் பராயமற்ற பிள்ளையாகிய இராசரட்டினம் சண்முகரட்டினத்தினுதனம் வேண்ட விரும்புவோர் தங்கள் கேள்விப் பத்திரத்தை, இப்பிரசுரத் தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் சக்கடத்தார் அவர் கட்டு அல்லது வழக்கறிஞர் யாழ்ப்பாணம் சாப்பல்வீதி நெ 25 ல் இருக்கும் சரவணமுத்து நடராசா ஆகியோருக்குச் சேர்ப்பிக்கவும். அதிக உயர்ந்த கேள்விக்காரருக்கே காணி விற்கப்படும். தேவையெனக் கண்டால் டை விற்பனவை நிற்பாட்டகோட்டுக்கு உரித்துண்டு.

ஆதன டாப்பு விபரம்

தெல்லிப்பழை மேற்கிலிருக்கும் "பலட்டியாவுடை" என்னும் காணி பர. நில இலா, $38\frac{3}{4}$ ம் இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும் சின்னத்தம்பி பெண் தங்கம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு வயிரவிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளைக்கும் சகோதரர்கள் அம்பலவாணர்பெண் வள்ளிப்பிள்ளை பிணுதனம்.

சரவணமுத்துவும் நடராசாவும்
பெட்டிசகாரன் பிரக்டர்கள்

M 22 9—13-5-47

## திரு. ரகுநாதன் இளைப்பாறுகிறார்

ஐக்கிய அபிவிருத்திப் பகுதியின் பிரதி அதிகாரியான ஸ்ரீ வி. ரகுநாதன் அவர்கள் தம் பதவியிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்து அதற்கான தம் பத்திரத்தைச் சமர்ப்பித்துவிட்டார். இவர் 9 வருஷ காலமாக விவசாயப் பகுதியில் கடமை பார்த்து, 1928 ம் ஆண்டில் ஐக்கியசங்க ஸ்தாபனத்தில் உதவிப்பதிவுக் காரியஸ்தராக நியமனம் செய்யப்பட்டார் வடஇலங்கையிலும் மட்டக்களப்புப் பகுதியிலும் ஐக்கிய இயக்கம் வெகுவாகப் பரவியிருப்பதற்கும் ஸ்ரீ ரகுநாதன் ஓர் மூலகாரணர் என்பது ஓர் பகிரங்கமான விஷயம், ஸ்ரீ ரகுநாதன் ஐக்கிய இயக்கத்திக்கு ஆற்றிய சேவையை மதித்து அரசாங்கம் அவரைப் பிரதம பிரதிப்பதிவுக் காரியஸ்தராக நியமித்தது. யுத்தம் தொடங்கி உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட, ஐக்கிய முறையில் உணவு விநியோகத்தைச் செய்யும் பொறுப்பை திரு. ரகுநாதன் ஏற்று, ஐக்கிய மொத்த வியாபாரப் பகுதியின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாளர். இதன்பின் ஐக்கிய அபிவிருத்திப் பகுதியின் பிரதி யதிகாரியாக நியமிக்கப்பட்டார்

ஸ்ரீ ரகுநாதனுக்கு இப்போது வயது 54. இன்னும் சில நாட்களில் அவர் பதவியினின்றும் இளைப்பாறிவிடுவார் என்று தெரிகிறது.

## தேவை

காரைநகர் வியாவில் ஐக்கிய பண்டசாலைக்கு மனேச்சர் ஒருவர் தேவை. தகுதிக்கேற்பச் சம்பளம் கொடுக்கப்படும். ரொக்கமாக 300 ரூபா பிணைகட்டுதல் வேண்டும். விரும்புவோர் 29-5-47 ந் தேதிக்குமுன் காரியதரிசிக்கு மனுப்பண்ணவும்.

M 24 13, 16, 20-5 47

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
காரைநகர் கிழக்கு சண்முகம் கைம்பெண் சேதுப்பிள்ளை வழக்காளி
இல. 3114

காரைநகர் கிழக்கு வயித்திலிங்கம் அம்பலவாணபிள்ளை, இவர் சிறுபிள்ளை சண்முகம் கந்தையா மகன் நடராசாவுக்கு பராபரிப்பும் காலஞ்சென்ற சண்முகம் கந்தையாவின் ஆதனத்துக்குத் தத்துவகாரனும். எதிராளி

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டுஇலக்க 3114-ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1947-ம்ஆ வைகாசி மீ 31 உ சனிக்கிழமைபிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

காரைதீவுக் கோயிற்பற்று களபூமிஇறைகூளன் கலட்டி கடையன் கலட்டி அம்பிளாவில் கலட்டி கலட்டியும், டனைக்கலட்டியும், நிலப்பரப்பு 51-ம் வீடுகளும் பனைவடலிகளும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு சண்முகம் செல்லத்துரைக்கும் ஆறுமுகம் நாகலிங்கத்துக்குமுரிய ஆதனங்கள், வடக்கு ஒழுங்கை, மேற்கு முருகேசு பெண் சுந்தரத்தினுதனம் தெற்கு கடற்கரை. இதடங்கலும்.

காரைநகர் ஆ. சு. கந்தையா
15—4—47 கொம்மிஷனர்

Mis 23 13-5-47

## ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயம்

நிகழும் சர்வசித்து வருஷம் சித்திரை மீ ௧௨ உ (25-4 47) வெள்ளிக்கிழமை காலை காரைநகர்க் கருங்காலி சுப்பிரமணிய ஆலயத்தில் துவஜாரோகணமாகி பத்து நாட்கள் உற்சவங்கள் நடத்தப்பெற்று ௨௧ உ (4-5-47) ஞாயிற்றுக்கிழமை இரவு துவஜாவரோகணம் நடைபெறறது. எம் காரைநகர்ச் சைவமகாசபையார் நிறுத்தவேண்டுமென்பதாகப் பல வருடங்களாய் முயற்சி செய்துவந்த தாசியர் நடனம், திருவுருவங்களுக்குக் கால் கை வைத்துக் கட்டுதல், அகால நித்திய நைமித்திகங்களை நடத்துதல் ஆகிய இக்குற்றஙகள் நிறுத்தப்பெற்று ஆலயத்திலும், அணித்தாகவுள்ள வித்தியாசாலைகளிலும் இப்பத்து நாட்களும் அன்பர்களின் பக்தியை வளரச் செய்யும் முறையில் அரிய விஷயங்கள் பிரசங்கிக்கப்பட்டன,

நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## சரவணப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

வாரற்புத முறவீங்கிய வன்னத்தன முருந்தின்
மூரர்பவ ளச்சேயிதழ் முழுமாமதி வதனத்
தாரற்பெயர் பெறுமங்கைய ரதுகாலேயி லரன்முன்
பேரற்போடு பணிந்தேயெழப் பெருந்தண்ணளி புரிந்தான்.

கச்சானது எக்கமுறுவ்வண்ணம் விம்மிய அழகிய தனங்களையும், மயிலிறகின் அடியிறகுபோன்ற வெள்ளிய பற்களையும், பவளம்போன்ற செவ்விய அதரத்தையும், மகத்தான பூரணசந்திரனை நிகர்த்த முகத்தினையுமுடையவர்களாகிய கார்த்திகைப் பெண்கள் அறுவரும் அந்தவேளையிற் பரமசிவனுடைய திருமுன்னிலையில் மிக்க பத்தியோடு பஞ்சாங்கமாக விழ்ந்து வணங்கியெழுந்து (விநயமாக) நிற்றலும், (பெருமான்) அவர்களுக்குப் பூரண அநுக்கிரகஞ் செய்தார் என்பது கருத்து.

ஆரற்பெயர் பங்கையர் - கார்த்திகைப் பெண்கள்; அற்பு - அன்பென்பதின் வலித்தல் விகாரம். (29)

சந்தன்றனை நீர்போற்றிய கடனுலிவ னுங்கள்
மைந்தன் னெனும் பெயராதுக மகிழ்வா லெவரேனும்
நுந்தம்பக லிடையின்னவ னேன்றுள்வழி படுவோர்
தந்தங்குறை முடிததேபரந் தனைநல்குவ மேன்றுன்.

இக் கந்தசுவாமியை நீவிர் பேணியதாகிய கடமையினுல், இம்முருகவேள் உங்களுடைய மகனென்னும் பெயராலும் வழங்கப்படுக. (மேலும்) எவரேனும் ஆசையோடு உங்களுக்குரியதாகிய கார்த்திகை நட்சத்திரப் நிகழும் நாளில் இம்முருகனுடைய (உயிர்கட்கு) ஆதாரமாகவுள்ள பாதங்களை வழிபடுபவர் தங்கள்தங்கள் உள்ளத்திற் கொண்ட குறைகளனைத்தையும் நீக்கி மறுமையில் பரமுத்தியை நாம் அவர்கட்கு வழங்குவேம் என்று கூறியருளினுர் என்பது கருத்து.

உங்கள் மைந்தனெனும் பெயர் — கார்த்திகேயன்; மகிழ்வால் - பத்தியோடு; நுந்தம் பகலிடை - கார்த்திகை நட்சத்திரத்தன்று: பகலென்றது இங்கே காலத்தைக் குறியாமல் முழுநாளையுங் குறித்து நின்றது. கார்த்திகை நட்சத்திர தினத்தன்று எவரேனும் எம் முருகவேளை வழிபட்டு அவ்விரதத்தை விதிப்படி பத்திபூர்வமாக அநுட்டிப்பின், யாமே அங்ஙனம் அநுட்டிப்போர்க்கு இகபர நன்மைகளை யருளவோமெனப் பரமேசுவரன் பணித்தாரென்பார் "இன்னவனேன்றுள் வழிபடுவோர்—தந்தங் குறைமுடித்தே பரந்தனை நல்குவம்" எனத் தன்மையிற் கூறினுரென்க. முருகக்கடவுளைக் குறித்து நோற்கும் விரதம் கார்த்திகை விரதம் கந்தசஷ்டி விரதம் ஐப்பசி வெள்ளிக்கிழமை விரதமென்னும் மூன்றுமாம்; இம்மூன்றனுள்ளும் கார்த்திகை விரதஞ் சிறந்ததென்பதை:—

"ஆறுமாமுக னருந்திட முலையமு தளித்தோர்
நாறுபூங்குழற் கார்த்திகை நாரிய ரவர்க்கு
நீறுபூசிய நின்மலன் அளித்தநல் வரத்தான்
மாறில் கார்த்திகை யுத்தம விரதமாய் வதியும்."

என வரும் மயூரகிரி புராணத் திருவிருத்தத்தா லுணர்க; மேலும் குமாரக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கப்படும் மூன்று விரதங்களின் பெருமையையும், அநுட்டித்தோர் பெற்ற அரும் பேறுகளையும், அநுட்டிக்கும் முறையையும் கந்தபுராணம், மயூரகிரி புராணம் முதலிய புராணங்களிற் பரக்கக் காண்க. (30)

என்னுவருள் புரிகின்றுழி யிமயத்தவர் சேயைத்
தன்னுரரு ளோடுசென்றெதிர் தழுவித்தனத் திழிபால்
பொன்னுர்மணி வள்ளத்துூன் பூரித்தருத் திடவே
யன்னுர்முலே யமுதுக்கவை யாறேத்தொழு கினவே.

என்று சிவபிரான் திருவாய் மலர்ந்தருளியபொழுது பருவதவர்த்தனியார் எழுந்தருளி முருகவேளைத் தம்மிடத்துப் பொருந்திய பூரண கருணையோடு எதிரணைத்துத் தமது திருத்தனங்களிலிருந்தும் சுரக்கும் பாலைப் பொன்னுலாகிய கிண்ணத்து எற்று நிறைத்திடலும், அத் திருமுலைப்பால் சுரந்து ஆறுபோற் பெருகியதென்பது கருத்து. முருகவேளுக்குப் பாலையூட்டியபோது, அதில் உட்கொண்டன போக, எஞ்சிய திருமுலைப்பால் ஆறுபோற் பெருகிப் பாய்ந்ததென்றபடி. (31)

வானுர்சுர நதிபோற்சர வணத்துடவை புகலும்
தூநான்மறை கரைகண்டவன் முதல்வந்திடு துணைவர்
ஆனுவறு சிறுவோர்தமை யளித்தோன்சபித் திடலான்
மீனுயவண் வதிகின்றவர் புகும்பாலினை மிசைந்தார்.

விண்ணுலகத்தி லுள்ளதாகிய தேவகங்கையைப்போல அந்தத் திருமுலைப்பாற் பெருக்கு சரவணவாவியிலே பாய்தலும், பரிசுத்தமாகிய நான்கு வேதங்களையும் சந்தேக விபரீதமற முழுதுமுணர்ந்து தொகுத்தவராகிய வியாச முனிவருக்கு முன்பிறந்த சகோதரர்களாகிய, குறைவில்லாத ஆறு பிள்ளைகள் தங்கள் தகப்பனுராகிய பராசர முனிவர் சாபமிட்ட காரணத்தினுல் அச்சரவணத் தடாகததிலே மற்சமாகச் சஞ்சரிப்பவர்கள், அங்ஙனம் பெருகித் தடாகத்திற் கலந்த திருமுலைப்பாலை யுண்டனர் என்பது கருத்து

அத்திருமுலைப்பாலானது தேவியாருடைய திருத்தனங்களினின்றும் பெருகிக் கீழேவந்து பரந்து வாவியிற்கலந்தமையால், அதனுடைய உயர்வை நோக்கியும் தூய்மையை நோக்கியும் வானுர்சுர நதிபோல் என உவமித்தார்: பராஞானம் அபர ஞானமென்னுமிரு தனங்களிலிருந்துஞ் சுரந்து பல கிளையாகப் பிரிந்து பெருகிச் சென்றமையினுல் "அவை" எனப் பன்மையிற் கூறப்பட்டது; முதல்வந்திடு துணைவர் - மூத்த சகோதரர்; தந்தையிடம் சாபம் பெற்றனரெனினும், பெருமாட்டியின் திருமுலைப்பாலை யுண்ணுதலாலும் முருகக்கடவுளின் திருவருளை யடையவிருத்தலினுலும், எவ்வகையான குறைவுமுறுதவரென்பார் "ஆனு அறுசிறுவர்" என்றுரென்க; மற்சவடிவாயுள்ள அச்சிறுவர் தாமாக அப்பாலைக் குடிக்க முயற்சிசெய்யாது, தடாகத்து நீரோடு கலந்துவந்த பாலின் படலையுணவாகக் குடித்தாரென்பார் "புகும்பாலினை மிசைந்தார்" என்றுர் இச்சிறுவர் பெயர்களையும் இவர்களுக்குத் தந்தை சாபமிட நேர்ந்த காரணத்தையும் ஏனைய வரலாற்றையும் மேல்வரும் சூரம்புகு படலத்திற் காண்க. (32)

# சமரசம்

## பஸ்தொழிலாளர்வேலைநிறுத்தம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை யிரவு நகரசபைத் தலைவர் திரு. ஸி. பொன்னம்பலம் செய்த முயற்சியின் பயனுக, இதுவரை வேலைநிறுத்தம் செய்த பஸ்தொழிலாளர்க்தும் முதலாளிமார்க்கு மிடையே ஓர் சமரசம் ஏற்பட்டுவிட்டது. இன்று தொடக்கம் வலி-மேற்குப் பஸ்கள் கிரமமாக ஓடுகின்றன மற்றும் பஸ்கள் நாளைதொடக்கம் கிரமமாகச் செல்லும்.

நகராசபைத் தலைவர் வீட்டில் நிகழ்ந்த மகாநாட்டில் தொழிலாளர் தங்கள்துறைகளையெல்லாம் எடுத் துரைத்தனர் என்றும், அவற்றை நீக்க முதலாளிமார் சம்மதித்தனரென்றும் தெரிகிறது. அன்று ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைப்படி இருதரப்பினரும் நடப்பதாகச் சம்மதம் தெரிவித்தனர்.

வேலைநிறுத்தம் செய்த நாட்களுக்குரிய சம்பள விஷயமாக மோட்டார்ப் பகுதி அதிகாரி எவ்வித தீர்ப்பளிக்கின்றரோ, அதன்படி நடக்க இருபகுதியினரும் ஒப்புக்கொண்டனர்.

## தேகவியோகம்

### திரு என். செல்லப்பா

இலங்கையரசாங்கத்தில் தபாற்கந்தோர் அதிபராக 38 வருஷகாலம் மிகத் திறமையுடன் கடமையாற்றியவரும் இளவாலையை ஜெனனவூராகக் கொண்டவருமாகிய திரு. என். செல்லப்பா அவர்கள் சென்ற மாதம் 12ந் திகதி இளவாலையில் உள்ள தமது இல்லத்திற்றுனே தேகவியோகமாயினர் என்று அறியலானேம். இவர் இறக்கும்போது வயது 74. யாழ்ப்பாணம் பகிரங்க வேலைப்பகுதியில் ஓவர்சியராகவிருக்கும் திரு. வி. பாலசுப்பிரமணியம் மீரிகமம் தபாற்கந்தோர் அதிபர் திரு. கனகநாயகம், கொழும்பு வைத்தியப்பகுதியில் லிகிதராகவுள்ள திரு. குமாரசுவாமி என்பவர்கள் இவரதுபுத்திரராவர்மகோனுபுகைரதஸ்தானத் தலைவர் திரு. சுப்பிரமணியம் இவரது மருகராவர். இவரைப் பிரிந்துவருந்தும் மக்கள் மருமக்கள் சுற்றமித்திராதியோருடன் எமது அநுதாபமும் உரியதாகுக.

●

### ஸ்ரீமதி ச. தையல்முத்து

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் பலகாலம் திறமையுடன் ஆசிரியராகக் கடமையாற்றிப் பல ஆண்டுகளுக்குமுன் தேகவியோகமடைந்த ஸ்ரீ M. சபாபதிப்பிள்ளையின் பிரிய பத்தினியும், யாழ்ப்பாணம் நகரசங்க சக்கிடுத்தார் ஸ்ரீ ச பாலசுப்பிரமணியம் அவர்களின் தாயாரும், மன்னூர்ச்சச்சேரியிற் கடமையாற்றும் ஸ்ரீ V. பொன்னுச்சுவாமியவர்களின் மாமியாரும், யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரியில் ஆசிரியையாகவுள்ள சௌ. பொ. பத்மாவதியின்பேர்த்தியுமான ஸ்ரீமதி தையல்முத்து சென்ற ஞாயிற்றுக்கிழமையிரவு, வண்கிழக்கில் உள்ள "சுந்தரகிரி" என்னும தமது மருகர் இல்லத்தில், தமது 71-வது வயதில் தேகவியோகமாயினர். இப்பெண்மணிகடவுட்பக்தி, ஈகை, தயை, முதலாம் சுகுணங்கள் அமையப்பெற்று எவர்க்கும் இனியராய் வாழ்ந்தவர். இவரது ஈமக்கிரியைகள் அடுத்தநாள் திங்கட்கிழமை கோம்பையன் மணல் மயானத்தில் அவரது புதல்வர் ஸ்ரீ பாலசுப்பிரமணிய மவர்களால், பலசனசமூகத்தில் விதிப்படி நிறைவேற்றப்பட்டன. இவரைப் பிரிந்து துன்புறும் சுற்றமித்திராதியோருடன் யாமும் அநுதாபப்படுகின்றேம்.

# செய்தித் திரட்டு

ஐக்கியதேச ஸ்தாபனத்தில் தனக்கும் அங்கத்துவம் அளிக்கவேண்டு மென்று இற்றலிய அரசாங்கம் டிை ஸ்தாபனத்துப் பொதுக் காரியதரிசிக்கு விண்ணப்பித்திருக்கிறது.

* *

சர்வதேச வங்கியிலிருந்து 25 கோடி டாலர் கடனுகப் பெறப் பிரான்சீய அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது.

* *

வின்ஸர் கோமகனும் அவர் தனைவியரும் சென்ற சனிக்கிழமை அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குப் பிரயாணமாயினர். அவர்கள் சிலகாலம் இங்கிலாந்திலேயே தங்கியிருப்பர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

* *

இலங்கையில் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள தெருக்களைச் சீர்ப்படுத்திப் பரிபாலிப்பதற்கு இந்த ஆண்டில் 92 லட்சத்து 10 ஆயிரம் ரூபா தேவைப்படுமெனக் கணிக்கப்படுகிறது.

* *

புடைவைக்கட்டுப்பாட்டுத்தலைமைக்கந்தோரிலிருந்து 150 புடைவைக் கூப்பன் புத்தகங்கள் மாயமாய் மறைந்துவிட்டன. இவை இறந்தவர்களின் கூப்பன்கள்.

* *

கம்பகாவைச் சேர்ந்த திஸநாயக்கா என்னும் ஆயுர்வேத வைத்தியர் ஒருவரும் வேறும் இருவரும் ஜேமிஸ் சிங்கோ என்பவனைக் கொலைசெய்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பு சுப்பிறீம்கோட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டனர்.

* *

இம்மாதம் முடிய, ஜப்பானிலிருந்து வெள்ளைப் புடைவைகள் கிடைக்கும் என்று ஓர் செய்தி கூறுகிறது.

* *

சென்ற அக்டோபர் மாதம் நிகழ்ந்த அகில இலங்கை வேலை நிறுத்தத்தினுல் புகைரதப்பகுதிக்கு 2 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டிருக்கிறதாம்.

## கடைசிமுடிவு என்ன?

2-ம் பக்கத் தொடர்ச்சி

தென்றும், வங்க மக்கள் அனைவரும் ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்றும் உருக்கமான ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறுர். மகாத்மா, சரத் போஸ், ஷூராவர்த்தி இம்மூவரும் சேர்ந்து வங்கப்பிரிவினைக்கு விரோதமாக நின்றுலும், மற்றும் காங்கிரஸ் வாதிகளும், ஹிந்து மகாசபையினரும், இனியும் வங்காளத்தை முஸ்லிமலீக்கர் கையில் விடமுடியாது என்று கூறுகின்றனர்: காந்திஜியினுல் பாகிஸ்தானைத் தடுக்க முடியவில்லை, அவர் சொல்லை ஜின்னுவும் லீக்கரும் கேட்கவில்லை. இந்த நிலைமையில், ஹிந்துக்களை வங்கப் பிரிவினைக்குப் பாதகமாக நிற்கும்படி காந்திஜீ கேட்டல் முறையல்லஎன்ற அபிப்பிராயம் பலமடைந்து வருகிறது.

●

## ஸ்ரீ அரவிந்தரின் அபிப்பிராயம்

வங்கப் பிரிவினை விஷயமாக இன்று புதச்சேரியில்தவமாற்றும் யோகிஸ்ரீஅரவிந்தர்தம் அபிப்பிராயத்தைவெளியிட்டிருக்கிறுர். இந்தியாவைத் துண்டாடாமல் ஐக்கிய சமஷ்டி சிருஷ்டிப்பதாகவிருந்தால் வங்காளம் இப்போதுள்ளதுபோல் இருக்கலாம். ஆனுல் பாகிஸ்தான்ஹிந்துஸ்தான் என்று பாரதகண்டம் பிரிக்கப்படுமாயின், வங்காளமும் கட்டாயம் பிரிக்கப்படல் வேண்டும் என்று ஸ்ரீ அரவிந்தர் தம் அபிப்பிராயத்தை அனுப்பியிருக்கிறுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சம் என்பது ( )ல்லை!

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராகு, கேது என்னும் இவை மிகவும் நன்று. அவனடியார்க்குத் தீதென்பது தோன்றுமா? என்பதை நன்குணர்ந்துகொள்ளுங்கள்.

"நீங்கள் உங்கள்மனத்தை முன்னிலையில் வைத்துக் காணும் பழக்கத்தைப் பழகினீர்களானால் அதுவே போதியது. பின்பு மனத்தினால் விளையும் தீங்குகள் மெல்லமெல்ல அருகிவிடும். புத்தியில் விளக்கமின்மை காரணமாக எழும் காமம், வெகுளி முதலியவற்றால் விளையுந் தீய செயல்கள் பிறர்க்குத் தீமையை விளைவிக்கும்முன்னரே, அஃதுடையநமக்கே அநேக தீமைகளைத் தருகின்றன. ஆகவே, அவைகளை நீக்கி, வாய்மை, உண்மை, நேர்மை ஆகிய பண்புகளை மனத்தமைத்துச் செயலிலேகொண்டு வருதல்வேண்டும். அதனைநீதிமன்றங்களிலாயினுஞ் சரி, சன சமூகத்தாயினுஞ்சரி, வேறெவ்விடத்தாயினுஞ்சரி நன்கு கடைப்பிடித்தல் வேண்டும்.

நாம்சைவர் ஆதலின் ஒருபோதும் பொய் பேசுதல்கூடாது; நாம்சிவமே பொருள் என்றதெளிவுஉடையோம். ஆதலின் அவனது ஸ்ரீ பஞ்சாட்சரத்தை எப்பொழுதும் நினைதல்வேண்டும். உருத்திராக்கம், விபூதி, ஆகியவற்றை நமது உடம்பில் தரித்துக் கொள்ளுதல்வேண்டும். விபூதி எமது அழுக்கைப் போக்குவது. ஒளியை அகத்தும் புறத்தும் தருவது; அதுவன்றி இவ்வுலகும், இவற்றிலுள்ள பொருளும் அநித்தியம் என்று அறிவிக்கும் சின்னமும் ஆகும். நீங்கள் திருநீற்றுப் பதிகத்தைத் தினந்தோறும் பாராயணஞ் செய்துவருதல் வேண்டும்.

"எங்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருந்தகை வேதத்திலும், ஆகமத்திலும் சைவசித்தாந்த சாஸ்திரங்களிலும் தேவார திருவாசகங்களிலும் இன்னும் பிறவற்றிலுமுள்ள சாரங்களைத்துருவி ஆராய்ந்து அவற்றிலுள்ள உண்மைகளைச் சுருக்கமாகவும், விளக்கமாகவும்புதுமையாகவும்பொதிந்து சைவ வினாவிடை, பாலபாடம் என்னும் புஸ்தகங்களை எழுதியுள்ளார். அவற்றினை விருப்புடன் படித்துவாருங்கள். உங்களுக்குச் சர்வ தடைகளையும் நீக்கி மேலான பேரின்பத்தைத் தந்தருள்புரிய வேண்டுமென்று எல்லாம்வல்ல கணேசனை வேண்டுகின்றேன்"

இதன்பின் பண்டிதர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் 'திருவாசகம்" என்னும் பொருள்பற்றி ஓர் சொற்பொழிவு செய்தனர். திரு. ஞானப்பிரகாசம், இந்துசாதன ஆசிரியர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை என்பவர்கள், முறையே, "சமயம்", "எங்கள் கடமை" என்னும் விஷயங்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். பண்டிதர் க. வேந்தனார் அடுத்ததாகப் பிரசங்கஞ் செய்தார். (அதன்சாரம் இப்பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளிவருகிறது.) மேற்படி சங்கத் தலைவரின் நன்றியுரையுடன் முதனாட் கூட்டம் பூர்த்தியாயது. அடுத்தநாள் ஸ்ரீமான் .. வ. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணத்தின்பல சிறந்த வித்துவான்கள் சங்கீதவிருந்து அளித்தனர்.

---

"இன்று மேற்கு நாடுகள் உலகாயுதத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறது. இதன் பயனாக, மேற்கு நாடுகள் இனி உலக நாகரிகத்துக்கு, சீர்திருத்தத்துக்குத் தலைமைதாங்கி மற்றும் நாடுகளுக்கு வழி காட்டும் உரிமையை இழந்துவிட்டன" என்றிவ்வாறு சென்றவாரம் கொழும்புக்கு விஜயஞ் செய்துள்ள, இந்திய ரட்சணிய சேனைத்தலைவர் கார்ப்பென்ரர் ஓர் பத்திரிகை நிருபரிடம் கூறினார்.

# திருச்சி ரேடியோ

புதன் மே 14

காலை 7.15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7-30 எம் ஆர் கிருஷ்ண மூர்த்தி ஐயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாஞெலிவாத்யகோஷ்டி 8-30 எஸ் எஸ் துரை வயலின் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் எஸ் துரை வயலின் 2-45 முடிவு.

மாலை சாட்டியக்குடி ஆர் மீனாட்சிசுந்தரம் பாட்டு 5-40 இசைபபயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 எழுத்தாளர் 8 எம் ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் பாட்டு 8-30 சாட்டியக்குடி ஆர் மீனாட்சிசுந்தாம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஆங்கிலப்பேச்சு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9-45 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு

7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி எஸ் சாவித்ரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் இசைத்தட்டு 8.30 குளித்தலை எம் ஆர் கோபால ரத்தினம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி எஸ் சாவித்ரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி எஸ் சாவித்திரி பாட்டு 2-15 கோடைக் கல்வி 2.45 முடிவு.

மாலை 5 பட்டமங்கலம் ஏ சாம்பசிவ ஐயர் வீணை 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 வாத்ய இசை 7-15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 கல்லிடைக்குறிச்சி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9- 5 உயிர்த் துணை நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் 9.45 பட்டமங்கலம் ஏ சாம்பசிவ ஐயர் வீணை 10.30 முடிவு.



# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to , 1—4—48



# 13,000 ரூ, பறிமுதல்

ஓர் கொள்ளை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பிரான்சிஸ் ரணசிங்க என்பவர் 13 000 ரூபாப் பிணையில் விடுதலையாக்கப்பட்டார். அவருடைய வழக்குச் சென்ற புதன்கிழமை கொழும்பு சுப்பிரீம் கோட்டில் விசாரணைக் கெடுக்கப்பட்டபோது அவர் சமுகமளிக்கவில்லை. அவர்க்குப் பிணை நின்றவர்களை நீதியரசர் உடனே தம் சமூகத்தில் அழைப்பித்துப் பிணையாகக் கட்டிய 13,000 ரூபாவும் பறிமுதலாக்கப்படுமென்றும், ஆனல் ஓர் வாரத்துக்குள் எதிரியைக் கொண்டுவந்து ஒப்படைத்தால், பிணைப் பணத்தைத் திருப்பித் தருவதுபற்றித் தாம் ஆலோசிப்பதாகவும் கூறினர். எதிரி தலைமறைவாக யாழ்ப்பாணத்தில் இருப்பதாகப் பிணைக்காரரில் ஒருவர் தெரிவித்தார்.



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

# சுத்தானந்தம்

யோகி ஸ்ரீ சுத்தானந்தரின் வாழ்க்கை வரலாறும், அன்னாரின் அருமை, பெருமை, உபதேசங்களை விளக்கும் கட்டுரைகளும் அடங்கிய அரியநூல். 172 பக்கங்கள்.

தனிப்பிரதி விலை ரூபா 2—8.
தபாற் செலவு 0—6.

ஓம்கார லைபரரி,
புத்தக விற்பனையாளர்கள்,
புதுக்கோட்டை.

யோகி சுத்தானந்தரின் போட்டோ 3—8.

Std 152.5.47—1.6.47.

# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.



## விளம்பர மின்றேல் பெரும்பணமில்லை

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, May, 13 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org